# கத்தோலிக்க திருமறை

# DRAFT

## ஆசிரியர் வழிகாட்டி

## முதலாந் தரம்

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
www.nie.lk
info@nie.lk

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

# முதலாந் தரம்

முன் பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் **WWW.nie.lk**
மின் அஞ்சல்: **info@nie.lk**

**கத்தோலிக்கம்**
**முதலாம் தரம்**
**ஆசிரியர் கைந்நூல்**

முதற் பதிப்பு 2016
தேசிய கல்வி நிறுவகம்
ISBN..................

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

## கற்றலும் கற்பித்தலும்

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்து கையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்ளின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனைய வற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பிணியினை அகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல்/ கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைசெயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்யூசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.
  அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்
  செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களை பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப் பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடிய தாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்தலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் /தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத் திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங்களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் (உளப்பாங்கு (Att tute), பகுப்பாய்வு (Anolysis), செயல் செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Account-ability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றென். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற்கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் குணபால நாணயக்கார
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை யெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டு களுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

# கலைத்திட்ட குழு

**ஆலோசனையும் அனுமதியும்** : அறிஞர் குழு, தேசிய கல்வி நிறுவகம்

**வழிகாட்டல்** : கலாநிதி வண. மாபுல்கொட சுமணரத்ன தேரர்.
பிரதி பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
அருட்தந்தை கே.எச்.எச்.பியல் ஜானக பர்னாந்து
தேசிய பணிப்பாளர், தேசிய தர்ம உபதேச நிலையம்
அருட்தந்தை எம் கிரேகரி லக்ஷ்மன் பர்னாந்து
உதவிக்கல்விப்பணிப்பாளர் (கத்தோலிக்கம்), கல்வி அமைச்சு
அருட்தந்தை கால்டன் சில்வா
விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்
அறிஞர் கே.ஏ.டி.பி.சரத்சந்திர
பணிப்பாளர் (முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை), தேசிய கல்வி நிறுவகம்

**பரிசீலனை** : கல்வி அலுவல்கள் சபை , தேசிய கல்வி நிறுவகம்

**பாட இணைப்பாக்கம்** : திருமதி நதி அமா ஜயசேகர
பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்
திருமதி சகுந்தலா ரணசிங்க
உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக வளவாளர்** : திருமதி நதி அமா ஜயசேகர

**வெளிவாரி வளவாளர்** : அருட்தந்தை கே.எச்.எச்.பியல் ஜானக பர்னாந்து
தேசிய பணிப்பாளர், தேசிய தர்ம உபதேச நிலையம்
அருட்தந்தை எம் கிரேகரி லக்ஷ்மன் பர்னாந்து
உதவிக்கல்விப்பணிப்பாளர் (கத்தோலிக்கம்), கல்வி அமைச்சு
திருமதி பீ.டி.பிலிஷியா அயரின்
ஆசிரிய ஆலோசகர், களனி கல்வி வலயம்
திரு ஏ.ஜே.ஆர். கொட்வின்
அதிபர், ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம், வத்தனை
திருமதி ஆர்.டபிள்யூ.கே.சி.எம்.எம்.ருக்ஷினி நிர்மலா பர்னாந்து
ஆசிரிய சேவை, நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை
திருமதி. டி. கௌசலா - ஆசிரிய ஆலோசகர்
கம்பொலை கல்வி வலயம்

**தமிழாக்கமும் கணணிப் பதிப்பும்:** திருமதி. டி. கௌசலா - ஆசிரிய ஆலோசகர்
கம்பொலை கல்வி வலயம்

# கத்தோலிக்க சமய ஆசிரியர் அறிவுறுப்பு வழிகாட்டியை உபயோகிப்பதற்கான ஆலோசனை

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தேசிய நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பொதுவான நோக்கங்களை அடைவதற்கு தேர்ச்சிகள் ஏழு அவ்வறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை:- தொடர்பாடல் தேர்ச்சி, ஆளுமை வளர்ச்சிக்கான தேர்ச்சி, சுற்றாடலுக்கான தேர்ச்சி, உழைப்பிற்கு ஆயத்த தேர்ச்சி, சமய, ஒழுக்க தேர்ச்சி, விளையாட்டு மற்றும் ஓய்வு பற்றிய தேர்ச்சி, கற்றல் - கற்பித்தல் தேர்ச்சி என்பன ஆகும்.

இத்தேர்ச்சிகளிலே சமய, ஒழுக்க தேர்ச்சியானது கத்தோலிக்க மாணவரிடையே வளர்த்தெடுக்க வேண்டிய பாடமாகும். இதன்படி எதிர்கால வளர்ச்சியைக் கட்டியெழுப்பும் கத்தோலிக்க சமய பாடத்திற்கும் அதனைக் கற்பிக்கும் ஆசிரியருக்கும் நாம் பெருமளவில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந் நோக்கத்தை முன்னெடுத்துச் சென்று, ஆரம்ப கல்வி கத்தோலிக்க சமய பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப வகுப்பு மாணவரின் வயது, வளர்ச்சி, மொழி திறமை, இரசனை ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டே அவர்களின் சமய பாட பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி அப் பிள்ளைகள் அடையக் கூடிய தேர்ச்சி, கற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் ஆகியவற்றை மட்டும் வரையறையாகக் கொண்டு இத்தேர்ச்சிகளை ஒழுங்கு செய்வதற்கு முயற்சியெடுக்கப் பட்டுள்ளது. அவ்வாறே, கற்றவற்றை செயன்முறை வாழ்வில் அனுபவிப்பதற்கு செயற்பாடுகள் மூலம் வழியமைக்கப்பட்டுள்ளது.

பாட விடயங்களைக் கற்றறிவது மட்டுமன்றி இறை சித்தத்தை ஏற்று இறைதந்தை, திருவிவிலியம், தூயவர்களின் குணவியல்பு, அயலவர்கள், சுற்றாடல் ஆகியவற்றுக்கும் தமக்குமிடையேயுள்ள உறவை வளர்ப்பதற்காக கத்தோலிக்கரிடம் இருக்க வேண்டிய தேர்ச்சியை உறுதியாக ஏற்படுத்திக்கொள்வது முக்கிய நோக்கமாகும்.

ஆரம்பப் பிரிவிற்காக தேர்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் முதலாம்தர பிள்ளைகளின் அறிவின் அளவை மனதிற் கொண்டு தேர்ச்சிகள் மட்டுமே குறிப்பிடப்பட்டு அதற்கான பாடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. ஆரம்ப நிலைக்கான தேர்ச்சி

1. இறைதந்தையின் அன்பை படைப்பின் வழியாக அனுபவித்து நன்றி கூறுவர்.
2. இறைதந்தையுடன் உரையாடுவர்.
3. இறைதந்தையின் பிள்ளைகளாகுவர்.
4. இயேசுவின் நற்பண்புகளை அறிந்து கொள்வர்.
5. தூயவர்களின் வரலாற்றையும் திருவிவிலியத்தையும் அறிந்து கொள்வர்.

தரம் 1-5 வரையிலான ஆரம்பப் பிரிவில் கத்தோலிக்க மறையைப் பற்றிய கற்றல் அனுபவத்தைப் பெறுகின்ற மாணவர், ஆரம்ப பிரிவைக் கற்று முடிக்கும்போது பாடதேர்ச்சியை அடைதல் எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் முதலால் தரத்திற்கான பாட உள்ளடக்கம்,

பாடத் திட்டத்தில் காட்டப்படுவதோடு அதில் காட்டப்படும் கற்றல் - கற்பித்தல் வழியாக கத்தோலிக்க சமய பாட திட்டத்திற்கான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். கற்பிப்பதில் மட்டுமன்றி செயற்பாட்டினால் கற்றல் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கட்புல - செவிபுல சாதனங்களைப் பயன்படுத்துதல் விரும்பத்தக்கது.

கத்தோலிக்க மறைப்பாடம் மிகவும் ஆர்வத்துடன் கற்பிக்க வேண்டிய பாடமாகும். மேலும் சிறுபிள்ளைகளுக்கு கத்தோலிக்க மறையை மிகவும் பொறுப்புடன் கற்பிக்க வேண்டும். சிறு பராயத்தில் மிகவும் சிறிய அல்லது விடயம் தொடர்பான அல்லது தவறான புரிந்துணர்வு ஏற்படின் அது அப் பிள்ளையின் இவ்வுலக வாழ்வில் மட்டுமன்றி நிலை வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆதலால் தெரியாதவற்றை அல்லது சந்தேகமான விடயங்கள் இருப்பின் அவற்றைத் தெளிவாக அறிந்து சரியானவற்றையே பிள்ளைகளுக்கு முன்வைக்க வேண்டும். இதற்காக ஆசிரியர் நேர்மை, அமைதியுடையவராய் செயலாற்ற வேண்டும்.

தமது வாழ்க்கை முறை பிள்ளைகளின் வாழ்க்கைக்கு முன்மாதிரிகையாக இருக்க வேண்டு மென்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

## 3. கற்றல் – கற்பித்தல் முறைகள்

பாடநூலை வாசித்தலானது கத்தோலிக்க மறையைக் கற்பிப்பதற்கான ஒரே வழியல்ல. சிறு பிள்ளைகள் விரும்புகின்ற செயற்பாடுகளைப் பயன்படுத்த வேண்டும். அச் செயற்பாடுகள் அனைத்தும் மறை வாழ்க்கையுடன் தொடர்புடைய செயற்பாடுகளாகும்- யாத்திரை ஸ்தலம், சமய சுற்றுலா, ஆலயத்தைப் பார்வையிடல், திருவழிபாடு ஆகியன இவற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

மேலும் திருவிவிலியக் கதைகள், தூயவர்களின் வாழ்க்கை வரலாறு, திருச்சபை வரலாறு ஆகியவற்றுடன் தொடர்புடைய கட்புல சாதனங்களுடன் இரசனையாக முன்வைக்கும் முறையைப் பயன்படுத்தலாம். இதனுடன் தொடர்புடைய பாடல், நடித்தல், பொம்மலாட்டம் போன்ற நற்செயற்பாடுகளை பிள்ளைகள் விரும்புவர். இச்செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தி படங்கள் வழியாக மனதைத் தொடும் விதத்தில் செய்தியை முன்வைப்பதற்குப் பாட நூலைப் பயன்படுத்தவும். படிப்பதாக கூறி ஒரு புதிய சுமையைப் பிள்ளைகளுக்கு அளிக்காது மிகவும் நிதானமான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை கத்தோலிக்க மறைப் பாடத்தில் பின்பற்ற வேண்டும். இச்செயற்பாடுகள் மூலம் கத்தோலிக்க மறையைக் கற்பதற்கான ஆசை பிள்ளையில் ஏற்பட வேண்டும் அவ்வாறு பிள்ளை மெதுவாக யேசுவை நெருங்கி வருதல் நடைபெறுகின்றது.

## 4. பாடசாலை நோக்கமும் வேலைத் திட்டமும்

கத்தோலிக்க மறைப் பாடத்துடன் தொடர்புடைய தேர்ச்சிகள் பலவற்றை பாடசாலை கலாச்சாரம் தொடர்பாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள வேலைத் திட்டங்களின் மூலம் வெளிப்படுத்த முடியும். அவ்வாறே உறுதிப்படுத்தவும் முடியும். மேலும் இந்த தேர்ச்சிகள் கட்டியெழுப்பப்படும் பாடசாலைக் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதில் அதிபர் விசேட கவனம் எடுப்பது விரும்பத்தக்கது.

ஆரம்ப பாடசாலைக்காக செயற்படுத்தப்படும் சமய நிகழ்ச்சியானது, இதில் முக்கிய இடத்தை வகிக்கிறது. முதலாம் தரத்திற்காக மிகவும் எளிமையாக நடைபெறும் இந்த நிகழ்ச்சியை முறையாக முன்னேற்றலாம். பல நிகழ்வுகளை இதில் ஒ்னறிணைக்கலாம்.

பாடசாலை அமைந்துள்ள இடத்தில் பங்குக் குரு அல்லது அண்மையிலுள்ள ஆலயம் அல்லது நிர்வாகக் குருவானவரைச் சந்திப்பதற்குப் பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவதோடு ஒரு தவணையில் குறைந்தது இரண்டு தடவைகளாவது பிள்ளைகளை கோயிலுக்கு அழைத்துச் சென்று இறைதந்தையின அன்பை அவர்கள் அனுபவிப்பதற்கு, அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். உதவி, நல்லுறவு, ஒழுக்கம், தூய்மை, சுற்றாடலை அலங்கரித்தல், பாதுகாத்தல், ஆசிரியர்கள் மட்டில் மரியாதை ஒழுக்கம் போன்ற பாடசாலை கலாச்சராத்தில் நடைபெறுகின்ற சிறப்பான தனித்துவம் ஆகியன வழியாக கத்தோலிக் மறை பாடத்தின் தேவையை நிறைவேற்றலாம். அதனால் பாடத்தில் கற்பிக்கின்ற அனைத்தும் செயன்முறைப்படுத்துவதோடு ஊட்டமும் பெறுகிறது.

## 5. கணிப்பீடு

இந்த தரத்தின்போது முறைசார் கணிப்பீட்டை விட முறைசார்பற்ற கணிப்பீட்டிற்கு முதலிடமளிக்க வேண்டும். சமய செயற்பாடு, அழகு சேர்க்கும் வேறு செயற்பாடுகள், பாட நூலைப் பயன்படுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களில் பரிசீலனை, உரையாடல், வாழ்மொழி வினா போன்ற முறைசார்பற்ற கணிப்பீட்டு முறை வழியாக இந்த வகுப்புக்கேற்ற சமய தேர்ச்சி வளர்ச்சியடைகிறதா என அடிக்கடி கணிப்பீடு செய்வது வரவேற்கத்தக்கது.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | i |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| கலைத்திட்டக் குழு | vi |
| கத்தோலிக்க சமய ஆசிரிய வழிகாட்டியை உபயோகப்படுத்துவதற்கான ஆலோசனை | vii - ix |
| பாடத்திட்டம் | xi |
| அறிமுகம் | xii |
| தேசிய இலக்குகள் | xiii |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | xiv- xv |
| விடய நோக்கம் | xvi |
| ஆரம்பக்கல்வித்திட்டம் | xvii |
| கால ஒதுக்கீடு | xviii |
| பாடத்திட்டம் | xix - xx |
| கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல் | 1 - 29 |

# பாடத்திட்டம்

## அறிமுகம்

தேசியக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளிடையே, சமய மற்றும் விழுமியங்களுக்குரிய தேர்ச்சிகளைப் பிள்ளைசளிடையே கட்டியெழுப்புவது சமய பாடத்தின் பொறுப்பாகும்.

சிறு குழந்தையின் இள மனதிலே புதியதோர் விடயத்தை விதைப்பது இலகுவான விடயமாகும். அவ்வாறே நற்பழக்க வழக்கங்களுக்குப் பிள்ளைகளை இசைவுபடுத்துவதும் இலகுவில் ஆற்றக் கூடியவொன்றாகும். சிறு பிள்ளைகளில் காணப்படும் பண்புகளுக்குப் பொருந்தும் வகையில் இங்கு பல்வேறு செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாட உள்ளடக்கத்திற்குப் பொருத்தமாக பிள்ளைக்கு உரிய தேர்ச்சியை பெற்றுக் கொடுத்துக் கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்கு அச் செயற்பாடுகள் உங்களுக்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அது மட்டுமன்றி நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்வதன் அடிப்படையில் மரணத்திற்குப் பின்பும் நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு சமயத்தினைக் கற்பிப்பது சந்தேகமின்றிப் பயனனிக்கும்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடத்திலிருந்தே சிறந்த சமூகமொன்றினை ஆரம்பிக்கும் அடிப்படையினை ஆரம்பித்தல் வேண்டும். இவ் விடயத்திற்கான பாரிய பங்களிப்பினைப் பொறுப்பேற்றிருக்கும் அதிர்ஷ்டசாலி ஆசிரியர் நீர் ஆவீர். ஆகவே உங்களால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பினை மேலாக மதிக்கின்றோம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**அடிப்படைத் தேர்ச்சிகள்**

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை:

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில்நுட்பத் தகைமை :கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

| | | |
|---|---|---|
| **சமூகச் சூழல்** | : | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன் களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொது வானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப் பாடுகள் என்பவற்றில் அக்கறை. |

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) ''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

# விடய நோக்கம்

1. சமுதாயத்தில் கௌரவத்தோடு வாழக்கூடிய கிறிஸ்தவ பிள்ளையை உருவாக்கல்.

2. கிறிஸ்தவ விழுமியங்களைக் கடைப்பிடிக்ககூடிய வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்புதல்.

3. திருவிவிலியம் தேவ வார்த்தையாகும் என்பதை உணர்த்தி, திருவிவிலியத்திற்கு ஏற்றவகையில் வாழ்வதற்கு ஊக்கப்படுத்தல்.

4. இறைத்தந்தையுடன் ஆன்மீக தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதற்கான பயிற்சியை அளித்தல்.

5. தூயமரியாள் மற்றும் தூயவர்களின் நடத்தைகளின் ஊடாக முன்மாதிரியைப் பெற்றுக் கொள்ளல்.

6. இறைகொடையான சுற்றாடல் பாதுகாக்கப்படும் பொருட்டுச் சிக்கனத்தைக் கடைபிடுத்து மேலும் அபிவிருத்தி செய்வதற்கான எண்ணத்தை உருவாக்கல்.


7. இயற்கையையும் தன்னைச் சூழ வாழ்பவர்கள் ஊடாக இறை அன்பை அனுபவிப்பதற்கும் பிரதி அன்பை வெளிப்படுத்துவதற்குமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தல்.


8. அனைவருக்கும் அன்பு செலுத்தி, குழுவில் ஒற்றுமையுடனும் சமத்துவத்துடனும் செயற் படும் ஆற்றலை மேம்படுத்துதல்.

9. ஏனைய சமயங்களுக்கு மதிப்பளிப்பதுடன் ஒத்துழைப்புடன் வாழக்கூடிய உயர்ந்த குணநலனை விருத்திசெய்தல்.

10. இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் பொறுப்புக்களையும் கடமைகளையும் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

## ஆரம்பக் கல்வித் திட்டம



# கால ஒதுக்கீடு

## முதன்மை நிலை ஒன்று (தரம் 1 - தரம் 2)

| பாடம் | | வாரத்திற்கான நேர ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தாய்மொழி | 5.00 மணித்தியாலம் |
| 2. | கணிதம் | 3.30 மணித்தியாலம் |
| 3. | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 5.30 மணித்தியாலம் |
| 4. | சமயம் | 1.15 மணித்தியாலம் |
| 5. | இரண்டாம் தேசிய மொழி | 30 நிமிடம் |
| 7. | ஓய்வு | 1.15மணித்தியாலம்<br>(நாளொன்றுக்கு15நிமி) |
| 8. | உணவு வேளை | 50 நிமிடம் (நாளொன்றுக்கு 10 நிமி) |
| 9.. | உடல்நல செயற்பாடுகள் | 1.40 மணித்தியாலம்<br>(நாளொன்றுக்கு 20நிமி) |
| 10. | பாடம் தொடர்பான செயற்பாடுகள் | 30 நிமிடம் (வாரம் ஒரு நாள்) |
| | வாரத்திற்கான மொத்த நேரம் | 21 மணித்தியாலம் 15 நிமிடங்கள் |

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 1. வல்லமை நிறைந்த இறைதந்தையை அன்பு செய்தல் | வல்லமை நிறைந்த இறைதந்தையின் அன்பை, படைப்பின் மூலம் உணர்ந்து கொள்வார் துதி செலுத்துவார் பிரதி அன்பு செலுத்துலார் | 1.1 மரங்கள், கொடிகள், பூக்கள், பிராணிகளுடன் கூடிய அழகிய உலகம்<br><br>1.2 வல்லமை நிறைந்த இறை தந்தை அளித்த புதுமையான மனித உடலைத் தகுந்த முறையில் பிரயோசனப்படுத்துதலும், தூய்மையாக வைத்திருத்தலும்.<br><br>1.3 தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், பாட்டி, தாத்தா நெருங்கிய உறவினர்கள் ஆகிய குடும்பத்தில் உள்ளவர்கள்.<br><br>1.4 ஆசிரியர்கள், சுற்றத்தார், நண்பர்கள்<br><br>1.5 மரங்கள், கொடிகள், பூக்கள், செல்லப்பிராணிகள், பறவைகள் அடங்கிய சர்வவல்லமை பொருந்திய இறைதந்தை அளித்த அழகிய உலகுக்கு அன்பு செய்தலும் அதைப்பாதுகாத்தலும். |
| 2. வல்லமை நிறைந்த இறைதந்தையுடன் உரையாடுதல். | வல்லமை நிறைந்த இறை தந்தையுடன் உரையாடுவர். | 2.1 தலைவணங்குதல், முழந்தாழ்படியிட்டு வணங்குதல் ஆகிய வணக்க நிலைகள்.<br><br>2.2 அர்ச்சிஷ்டசிலுவை அடையாளத்தை இடுதல் / தூய திருத்துவ அர்ச்சிஷ்ட சிலுவை செபம் |
| 3. வல்லமை நிறைந்த இறைதந்தையுடன் உரையாடுதல். | வல்லமை நிறைந்த இறைதந்தையின் பிள்ளையாக மாற்றமடைவர் | 3.1 திருமுழுக்கு |

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 4. மேன்மையான இயேசுவின் விசேட பண்புகள். | மேன்மையான இயேசுவின் விசேட பண்புகளை பெயரிடுவார். | 4.1 மேன்மையான இயேசுவின் தாய் மரியாளை அறிந்து கொள்வார்.<br>4.2 மேன்மையான இயேசுவின் வளர்ப்புத்தந்தையாகி சூசையை அறிந்து கொள்வார்.<br>4.3 மாட்டுத்தொழுவத்தில் பிறந்த மேன்மையான இயேசு<br>4.4 மேன்மையான இயேசுவின் முதலாவது புதுமை<br>4.5 சிலுவை மரணத்துக்குள்ளான மேண்மையான இயேசு |
| 5. திருவிவிலியமும் தூயவர்களின் நடத்தையும். | தூயவர்களின் நடத்தையையும் திருவிவிலியத்தையும் அறிந்து கொள்வர். | 5.1 திருவிலியம்<br>5.2 தூய யோசப்வாஸ்<br>5.3 தூய அன்னம்மாள்<br>5.4 தூய அந்தோனியார்<br>5.5 தூய செபஸ்தியர்<br>5.6 அதி வணக்கத்திற்குரிய பிரான்சிஸ் திருத்தந்தை |

# கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்

**கருப்பொருள்:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையை அன்பு செய்தல்.

**தேர்ச்சி:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையின் அன்பைப் படைப்பின் மூலம் அனுபவிப்பார், துதி செலுத்துவார், பிரதி அன்பு செய்வார்.

**கற்றல் பயன் :** 1.1

- அழகிய உலகினை வர்ணித்து அதை பாதுகாத்துக் கொள்ளும் முறையைக் கலந்துரையாடுவார்.
- அழகிய உலகத்தைச் சித்திரமாக வரைவார் சுவரொட்டி ஒன்றை அமைப்பார்.
- பாடலொன்றின் மூலம் அழகிய உலகத்தை தந்த சர்வ வல்லமை பொருந்திய இறைதந்தையைத் துதிப்பார்.

**கற்றல் வளம் :–**

- பூக்கள், பழங்கள் நிறைந்த மரம், செடி கொடிகள், பிராணிகள் இயற்கைச் சுற்றாடல் அடங்கிய அழகிய படைப்பைக் காட்டும் படமொன்று.
- கத்தோலிக்க கீர்த்தனை நூல்,சித்திரங்கள்,சுவரொட்டிகள் அமைப் பதற்குத் தேவையான பொருட்கள்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள் :–**

**படி 1:**

- மாணவர்களை வகுப்பறையிலிருந்து வெளியே அழைத்து வந்து அழகிய சுற்றாடலைக் காண்பதற்கு வழி அமைத்தல்.
- சுற்றாடலின் அழகை வர்ணித்தல், பாதுகாத்தல் பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்துக.
- மாணவர்களுடன் சேர்ந்து பின்வரும் பாடலை பாடவும். மரங் களிலே பூத்துக்குழுங்கும் மலர்கள் அழகுதான் அதில் சிலவற்றைப் பறிப்போம் மீதியை மரத்திலே வைப்போம் அனைத்தையுமே பறித்து விட்டால் மரம் துக்கப்படுமே வண்ணத்துப்பூச்சிகளும் பசியால் வாடுமே

**படி 2**

- அழகிய படைப்பைக் காட்டும் படமொன்றை காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப்படுத்திய படம் தொடர்பாகக் கலந்துரையாடி அவற்றில் மாணவர்கள் விரும்பியதை வரைவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இரண்டு பிரிஸ்டல் அட்டைகள் அல்லது மாணவர்களின் உயரத்திற்கு ஏற்றவாறு அட்டைகளை சுவரில் பொருத்தி மாணவர்களால் வரையப் பட்ட இறைவனின் படைப்பைக் கொண்டு பெரிய சுவரொட்டியை நிர்மாணிக்கவும்.

**கணிப்பீடு :**

- அழகிய உலகத்தைத் தந்த இறை தந்தைக்கு துதி செலுத்து வதற்காக
- அவர் படைத்தவற்றை ஒட்டிப் பெரிய சுவரொட்டியொன்றை உருவாக்குவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக**

- சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு முன்வருதல்.

**கருப்பொருள்:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையை அன்பு செய்தல்.

**தேர்ச்சி:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையின் அன்பைப் படைப்பின் மூலம் அனுபவிப்பார், துதி செலுத்துவார், பிரதி அன்பு செய்வார்.

**கற்றல் பயன் :** 1.2

- மனித உடல் இறைவனின் அற்புதமான படைப்பு என்பதைக் கூறுவர்.
- உடலைப் பாதுகாத்து கொள்ளும் முறையைக் கூறுவர்.
- இறைதந்தையின் அன்பை உணரந்து உடல் அவயவங்களின் பயனை கலந்துரையாடுவார்.
- சர்வல்லமை பொருந்திய இறைதந்தையிடம் இருந்து பெற்றுக் கொண்ட அற்புதமான உடலை மதித்து படல் பாடுவார்.
- தனது உடலைத் தூய்மையாக வைத்திருப்பதன் முக்கியத்துவத் தைக் கூறுவார்.
- சர்வல்லமை பொருந்திய இறைதந்தையிடம் இருந்து தான் பெற்றுக்கொண்ட உடலைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் அவருக்கு பிரதி அன்பு செய்வார்.

**கற்றல் வளம் :**

- பூக்கள், இஞ்சி, எலுமிச்சை இலை, கருவப்பட்டை ஆகிய வாசனைத்திரவியங்கள்.
- பிள்ளைகளின் கீர்த்தனைகள் அடங்கிய ஒலிநாடா, இசைக்கருவி ஒன்று
- ஆண்டவர் எத்துணை நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள் என்ற கீர்த்தனை, பெரிய எழுத்தில் எழுதப்பட்ட சுவரொட்டி.
- பொம்மையொன்று.

**கற்றல் கற்பித்தல் உத்திகள் :-**

**படி 1 :**

- மாணவர்கள் வெளியில் சென்று சிறிது நேரம் கண்களை மூடியிருப்பதற்கு இடமளியுங்கள்.
- கண்களினால் நாம் உலகத்தை பார்க்கக்கூடிய முறையை கலந்துரையாடுங்கள்.
- சர்வ வல்லமை பொருந்திய இறைதந்தை எமக்களித்துள்ள கண்கள் மேன்மையான கொடை என்பதைக் கூறுங்கள்.
- சுற்றுச் சூழலில் கேட்கும் சத்தங்களை செவிமடுப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- செவிமடுத்தல் மூலம் எமக்கு உலகை புரிந்துக்கொள்ளக்கூடிய விதத்தைக் கலந்துரையாடுங்கள்.
- சர்வ வல்லமை பொருந்திய இறைதந்தை எமக்களித்துள்ள செவிகள் மேன்மையான கொடை என்பதைக் கூறுங்கள்.
- பின்வரும் பாடலை மாணவர்களுடன் சேர்ந்து பாடுவதன் மூலம் சர்வவல்லமை பொருந்திய இறைதந்தைக்கு துதி செலுத்துங்கள்.

நல்லவற்றை அறிந்து கொள்ள பறவையின் கீதம் செவி மடுக்க
இச்செவிகளை எனக்குத் தந்தமைக்கு நன்றி தந்தையே
பழங்களைச் சுவைப்பதற்கு இனிய கவி வரிகள் பாடுவதற்கு
சிறிய வாயை தந்தமைக்கு நன்றி தந்தையே
அழகிய உலகை காண்பதற்கு அழகியவற்றை காண்பதற்கு
இக்கண்களை எனக்குத் தந்தமைக்கு நன்றி தந்தையே

படி 2:

- மூக்கு,வாய் போன்ற ஏனைய அவயவங்களின் பயன்கள் பற்றி மாணவர்களுடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- பூக்கள், இஞ்சி, எலுமிச்சைஇலை,கருவப்பட்டை ஆகிய வாசனைத் திரவியங்களைக் கையாண்டு பார்ப்பதற்கு இடமளியுங்கள்.
- எமக்கு மூக்கைப் பெற்றுத்தந்ததன் மூலம் சர்வ வல்லமை பொருந்திய இறைதந்தை செலுத்தியுள்ள அன்பைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- முன்னர் பாடிய பாடலை மாணவர்களுடன் சேர்ந்து மீண்டும் பாடுவதன் மூலம் சர்வவல்லமை பொருந்திய இறைதந்தைக்கு துதி செலுத்துங்கள்.

படி 3:

- பொம்மையை முன்வைத்து அதன் அவயவங்களை காட்டுங்கள்.
- பொருத்தமான சிறுவர் பாடலொன்றை செவிமடுத்து, அதன் தாளத் திற்கேற்ற வகையில் நடனமொன்றை முன்வைப்பதற்கு மாணவர் களை வழிப்படுத்துங்கள்
- கைகள், கால்கள் ஆகிய அவயவங்கள் நடனத்தின் போது எமக்குப் பயன்பட்ட விதம் பற்றி தெளிவுபடுத்துங்கள்
- சர்வவல்லமை பொருந்திய இறைதந்தை அருளிய சரீரத்தை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய முறையைக் கலந்துரையாடுங்கள்.

படி 4:

- சர்வவல்லமை பொருந்திய இறைதந்தை அருளிய சரீரத்தை தனதும் ஏனையவர்களினதும் நன்மைக்காக பயன்படுத்தவதன் மூலம் நாம் இறைதந்தைக்கு பிரதியன்பு செலுத்தமுடியும் என்பதை உணர்த்துங்கள்.
- வாழ்வை எனக்கு தந்த இறைவனே என்ற பாடலை மாணவர்களுடன் சேர்ந்து பாடி சர்வவல்லமை பொருந்திய இறைதந்தைக்கு துதி செலுத்துவதற்கு இடமளியுங்கள்.
- சர்வவல்லமை பொருந்திய இறைதந்தை அருளிய சரீரத்தைப் பிறருக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் பயன்படுத்த வேண்டுமென்பதை எடுத்துக்கூறி மாணவர்களுடன் சேர்ந்து கீழ்வரும் பாடலை தாளத்துடன் பாடவும்.

என்னை துன்பப்படுத்துவதை விரும்பவில்லை - நான்
ஏனையோர் துன்புறுவதும் விருப்பமில்லை - தான்
விருப்பமில்லை இரு கண்கள் கண்ணீரில் - நனைவதுமே
இயேசு கிறிஸ்து போலாவோம் சிறுவர் - நாமுமே

**படி 5:** • மாணவர்களை வெளியில் அழைத்ததுச் சென்று வட்டமாக நிற்கச் செய்து அன்றாட வாழ்வில் தமது சரீரத்தைச் சுத்தமாக வைத்திருப் பதற்காகச் செய்யக்கூடியவை பற்றி கலந்தரையாடுங்கள்.

**படி 6:** • தூய்மை பற்றிக் கூறும் கீழ்வரும் பாடலை உரத்து பாடியவாறு நடிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

காலையில் எழுந்து பல் துலக்குவோம்
முகம் கழுவி உணவு உட்கொள்வோம்
தூய்மையாக நாளைத் தொடங்க இறைவணக்கம் செய்வோம்
மகிழ்ச்சியாகப் பாடசாலைக்குச் செல்வோம்
நன்றாகக் கல்வி கற்று வீட்டிற்குத் திரும்புவோம்
தூய்மையாக நாளை முடித்து இறைவணக்கம் செய்வோம்.

**கணிப்பீடு :** • தமது உடலைத் தூய்மையாக வைப்பதற்கு வேண்டியவற்றை பெயரிடுவார்.

**நடைமுறை வாழ்க்கைப் பயன்பாட்டுக்காக:**

- சுய சுத்தத்தைப் பாதுகாத்தல்

**கருப்பொருள்:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையை அன்பு செய்தல்.

**தேர்ச்சி:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையின் அன்பை படைப்பின் மூலம் அனுபவிப்பார், துதி செலுத்துவார், பிரதி அன்பு செய்வார்.

**கற்றல் பயன் :** 1.3

- பெற்றோர் சகோதரர், உறவினர், நண்பர்கள்ஆசிரியர் என்போர் இறைவனின் கொடை என்பதை எடுத்துக் கூறுவர்.
- அவர்களுக்கு உதவும் முறை பற்றி விளக்கமளிப்பர்.
- பெற்றோருக்கு இறைபாதுகாப்பை வேண்டிப் பாடலொன்றைப் பாடுவார்.
- எந்நேரமும் நமக்கு நல்வழிகாட்டும் பெற்றோருக்கு அன்புமரியாதையும் காட்டிக் கீழ்படிய வேண்டும் என்பதைஏற்றுக்கொள்வாார்.
- கதையொன்றின் நிகழ்வுகளை சித்திரமாக வரைவாார்.

**கற்றல் வளம் :**
- குடும்பஅங்கத்தவர்கள் ஒன்றாக இருக்கும் புகைப்படமொன்று.
- உறவினரொருவர் உள்ள புகைப்படம்.
- கிறிஸ்தவ கீதங்கள்/ பாடல்கள் நூல்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள் :-**

படி 1 :
- பின்வரும் கதையை மாணவர்களுக்கு முன்வையுங்கள்

ஓர் ஊரில் அரசர் ஒருவர் இருந்தார். அவ்வூரிலே ஆண் குழந்தை பிறந்தால் உடனேயே கொன்றுவிட வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார். ஒரு வீட்டிலே தாய்க்கு ஆண் குழந்தையொன்று பிறந்தது. அக் குழந்தையின் தந்தை அரசரிடம் வேலை செய்ததால் பிள்ளையைக் கொன்றுவிடுவார் என்ற பயத்தினால் அந்தத் தாய் கோரைப்புல்லால் பேழை ஒன்றை செய்து குழந்தையை அதனுள் வைத்து, அரசரின் மகள் குளிப்பதற்காக வரும் நதிக்கரையில் நாணல்களுக்கிடையில் வைத்தாள். குழந்தைக்கு ஏதும் பிரச்சினை ஏற்படின் அதனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் அதன் அக்கா தூரத்தில் நின்று கொண்டிருந்தாள். அப்போது அரசனின் மகள் குளிப்பதற்காக தோழியருடன் அங்கே வந்தாள். பேழைக்குள்ளிருந்த குழந்தையை அன்புடன் அரவணைத்தாள். குழந்தையை வளர்ப்பதற்காக தாயொருவரை இளவரசி தடுவதை மறைந்திருந்த குழந்தையின் சகோதரி கண்டாள். குழந்தைக்கு தாய் ஒருவரைத் தேடித்தர முன்வந்தாள். தனது தாயை இளவரசியிடம் கூட்டி வந்தாள். குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்குமாறு இளவரசி அதன் தாயைப் பணித்தாள். இதனால் தனது குழந்தையை அன்புடன் வளர்ப்பதற்கு அவளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

- இக்கதையை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக் கான விடைகளைக் காண்பதற்கு கலந்துரையாடுவோம்.

    ★ குழந்தையின் பெற்றோர் பிள்ளையில் எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள் எனப் பாருங்கள்.

    ★ குழந்தையின் அக்கா, தம்பியில் எவ்வளவு அன்பாக இருக்கிறார் எனப் பாருங்கள்.

    ★ உங்களின் பெற்றோர், சகோதர சகோதரிகள் உங்களில் எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள்?

- மேற்கூறப்பட்ட கதையில் தமது உள்ளம் கவர்ந்த சந்தர்ப்ப மொன்றைச் சித்திரமாகக் கட்டியெழுப்புவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

படி 2:

- ஒற்றுமையாக இருக்கும் குடும்பமொன்றின் புகைப்படத்தைக் காட்டுங்கள்.
- மாணவர்களுடன் கீர்த்தனை பாடல் எண் 465 ஐப் பாடுங்கள்.

    உதிரத்தைப் பாலாய் ஊட்டி வளர்த்த அம்மா
    உடல்நோய் என்னை வருத்தும் போது
    கண் விளித்துக் காத்தாய் அம்மா
    கண்ணிமை போல என்னை
    காத்திட்ட அம்மா உன்னை
    கர்த்தரவர் நித்தமும் காத்திட
    வேண்டுகின்றேன் அம்மா
    நெற்றி வியர்வை சிந்தி
    நித்தமும் கடுமையாய்
    பற்றுதலோடு உழைத்து என்னை
    கண்போல காக்கும் அப்பா
    எனது மகிழ்வுக்காய் எனது உயர்வுக்காய்
    தன் சுகம் ஒறுத்த உங்களை இறைவன்
    காத்திட வேண்டுகிறேன்.

படி 3:

- உறவினர்களுள்ள புகைப்படத்தை மாணவர்களுக்கு முன் வையுங்கள்.
- அப்புகைப்புகைப்படத்தில் இருக்கும் மாமா, மாமி, தாத்தா, பாட்டி பற்றி கலந்துரையாடுங்கள்.
- உறவினர் பற்றிய தகவல்களை முன்வைப்பதற்கு மாணவர் களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவர்கள் அனைவரும் சர்வவல்லமை பொருந்திய இறைதந்தையின் அன்பினால் எமக்குக் கிடைத்தவர்கள் என்பதையும் அவர்களின் அன்பினால் சர்வவல்லமை பொருந்திய இறைதந்தையை அறிந்துக் கொள்வதையும் தெளிவுபடுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- சர்வவல்லமை பொருந்திய இறை தந்தையின் அன்பினால் எமக்குக் கிடைத்த பெற்றோருக்காக துதி செய்து பாடல் பாடுவார்.

**நடைமுறை வாழ்க்கைப் பயன்பாட்டுக்காக:**

- தினமும் பாடசாலைக்கு வருவதற்குமுன் பெற்றோரை வணங்குதல்.

**கருப்பொருள்:** வல்லமை பொருந்திய இறை தந்தையை அன்பு செய்தல்.

**தேர்ச்சி:** வல்லமை பொருந்திய இறை தந்தையின் அன்பை படைப்பின் மூலம் அனுபவிப்பார், துதி செலுத்துவார், பிரதி அன்பு செய்வார்.

**கற்றல் பயன் :** 1.4

- ஆசிரியர்களுக்கும் அயலவருக்கும் மற்றும் நண்பர்களுக்கும் அன்பு செலுத்துவார், உதவி செய்வார்.

**கற்றல் வளம் :**
- கடதாசிப் பூவொன்று செய்வதற்கு தேவையான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் உத்திகள் :-**

**படி 1 :**
- ஆசிரியர்களுக்கு அன்பு செலுத்தக்கூடிய முறைகளை கேளுங்கள்
- ஆசிரியர்களுக்கு அன்பு செலுத்தக்கூடிய சந்தர்ப்பங்களைச் சித்திர மாக வரைவதற்கு வழிகாட்டவும்.
- கடதாசிப் பூவொன்றைச் செய்து ஆசிரியர் தினத்தன்று ஆசிரியரை வரவேற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- கீழ்க்காணும் பாடலை ஒன்று சேர்ந்து பாடவும்.

  எனது முன்னேற்றத்துக்காக பாடுபடும் அன்பு ஆசிரியத் - தாயே
  எனது திறன்களை மெருகேற்றும் அன்பு ஆசிரியத் - தந்தையே
  சுகமும் தீர்க்காயுசும் பெற்றிட வேண்டும் நீங்கள் - நித்தமும்
  இயேசுவின் அருள் இறைஞ்சுகின்றேன் நீங்கள் நலமாய் - வாழ

**படி 2 :**
- தமது அயலவர்கள்,நண்பர்கள் தமக்கு உதவி செய்த சந்தர்ப்பம் ஒன்றையும் தாம் அவர்களுக்கு உதவி செய்த சந்தர்ப்பமொன்றை யும் மாணவர்களிடம் கேட்கவும்.
- கீழக்காணும் கதையை மாணவர்களுக்கு சொல்லுங்கள். மாமா மிகவும் பொல்லாதவர், நண்பர்களுக்கோ அயலவர்களுக்கோ உதவி செய்ய மாட்டார். ஒரு நாள் மாமா ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டார். என்னைக் காப்பாற்றுங்கள் என்று கத்தினார். அயலவர்கள் ஒன்று சேர்ந்து மாமாவைக் காப்பாற்றினார்கள். அன்றிலிருந்து அயலவர் களுக்கும், நண்பர்களுக்கும் மாமா உதவி செய்யத் தொடங்கினார். இப்போதெல்லாம் மாமா அடிக்கடி இப்படிக் கூறுகின்றார். அயலவர்களை நேசியுங்கள் என்று இயேசு கூறியிறுக்கின்றார்.

- இந்தக் கதையை நடித்துக் காட்டுவதற்கு மாணவர்களுக்கு பணியுங்கள். அயலவர்களும் நண்பர்களும் சர்வ வல்லமை பொருந்திய இறைதந்தையின் அருளால் எமக்கு கிடைத்தவர்கள் என்பதையும் அவர்களின் அன்பின் மூலம் சர்வ வல்லமை பொருந்திய இறைதந்தையை அறிந்து கொள்கின்றோம் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்

**கணிப்பீடு:**

- கடதாசிப் பூவொன்றை செய்து ஆசிரியரை வரவேற்பார்.
- மாமாவைப் பற்றிய நாடகத்தை நடித்துக் காட்டுவதற்கு உற்சாகத் துடன் பங்கேற்பார்.

**நடைமுறை வாழ்க்கை பயன்பாட்டிற்காக:**

- அயலவர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவி செய்தல்.

**கருப்பொருள்:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையை அன்பு செய்தல்.

**தேர்ச்சி:** சர்வ வல்லமை பொருந்திய இறை தந்தையின் அன்பை படைப்பின் மூலம் அனுபவிப்பார், துதி செலுத்துவார், பிரதி அன்பு செய்வார்.

**கற்றல் பயன் :** **1.5**

- சர்வவல்லமை பொருந்திய இறை தந்தையினால் படைக்கப்பட்ட அழகிய உலகை வளர்ப்பதற்காக பாடசாலை சூழலை சுத்தமாக்கி அழகுபடுத்துவார்.
- பிராணிகளுக்கு அன்பு காட்டுதல் பற்றி விபரிப்பார்.
- சர்வவல்லமை பொருந்திய இறைவன் படைத்த உலகின் உயர்வை வெளிப்படுத்தி பாடல் பாடுவார்.
- சர்வவல்லமை பொருந்திய இறைவனுக்கு பிரதி அன்பு காட்டு வதுடன் மரம் செடி, கொடி, பிராணிகளின் சூழலைப் பாதுகாப்பார்.

**கற்றல் வளம் :**

- தோட்டத்தில் நடுவதற்காக பழக் கன்றொன்று.

**கற்றல் கற்பித்தல் உத்திகள் :-**

**படி** 1 :

- பாடசாலைத் வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் பங்கு பற்றச் செய்து மாங்கன்றொன்றை நாட்டுங்கள். (வருடம் முழுவதும் அதைப் பாதுகாப்பதற்கு மாணவரை வழிப்படுத்தவும்)
- கன்றொன்றை நடுவதன் மூலம் சர்வவல்லமை பொருந்திய இறைத்தந்தையிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட அழகிய உலகத்தை விருத்தி செய்ய முடியும் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.
- வகுப்பறைக்கு வெளியே பூங்கன்றுகளை நாட்டி நீரூற்றி களைப்பிடுங்கி சுத்தம் செய்வதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.
- அப்படிச் செய்வது இறை அன்பிற்கு பதில் செய்வதாகும் என்பதை உறுதி செய்து காட்டுங்கள்
- கீழ்வரும் பாடலை மாணவர்களுடன் சோரந்து பாடுங்கள்.

சூரியன் உதிக்கும் வெயில் எறிக்கும்
பூக்கள் மலரும் மரங்கள் அசையும்
இறைவன் இவற்றை படைத்தது எம்மீதுள்ள அன்பினால்
மழை பொழியும் மண் வளமடையும்
குளிர் உணரலாம் உலகு உய்வடையும்
இறைவன் இவற்றை படைத்தது எம்மீதுள்ள அன்பினால்

**படி 2 :**

- பாடசாலை தோட்டத்திலிருக்கும் பறவைகளுக்கு உணவு வைக்கும் தட்டில் தாம்கொண்டு வரும் உணவில் ஒரு பகுதியை வைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- அப்படிச் செய்வது இறை அன்பிற்கு பதில் செய்வதாகும் என்பதை உறுதி செய்து காட்டுங்கள்.
- மரங்கள், மலர்கள், செல்லப்பிராணிகள் மூலம் சர்வ வல்லமை பொருந்திய இறைத்தந்தையின் படைப்பிற்கு அன்பு ஏற்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.
- பிராணிகளிடத்தில் அன்பு காட்டுதல், உணவளித்தல், நோய்வாய்ப் படும் போது மருந்து கொடுத்தல், பிராணிகளை நீராட்டிச் சுத்தம் செய்து இறைபடைப்பிற்கு எமது கௌரவத்தை செலுத்த வேண்டியமைபற்றி கலந்துரையாடுங்கள்.
- இவையனைத்தையும் பாதுகாப்பதன் மூலம் நாம் இறைத்தந்தைக்கு அன்பு செலுத்துகிறோம் என்பதனை மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.
- பின்வரும் பாடலை மாணவர்களுடன் ஒன்றாகப் பாடுங்கள்.

எனது சிறிய தோழனே இதனைக் - கேட்டிடு
இறைவன் உன்னை படைத்தது - அன்பினாலன்றோ
முழு உலகிற்கும் அவர் காட்டிய - அன்பினாலன்றோ
நீல வானில் பறந்து திரியும் பறவைத் - தோழனே
நீல நீரில் நீந்திச் செல்லும் தோழன் - மீனே
சிறிய உனக்கு ஜீவனைத் தந்தவர் இறை - தந்தையே
சிறியவன் எனக்கும் ஜீவனை அவர் தந்தார் - தோழனே

**கணிப்பீடு:**

- மரக்கன்றொன்றை நாட்டி அதை பராமரிப்பதற்கு முன் வருவார்.

**நடைமுறை வாழ்க்கைப் பயன்பாட்டுக்காக:**

- பூக்கள் வளர்ப்பதற்கும், வீட்டுத் தோட்டத்தில் பல வகையான பயிர்களை நாட்டுவதற்கும் வழிப்படுத்துதல்

**2.0: கருப்பொருள்** வல்லமை பொருந்திய இறை தந்தையுடன் உரையாடுதல்.

**2.0 தேர்ச்சி :** வல்லமை பொருந்திய இறை தந்தையுடன் உரையாடுவார்.

**கற்றற் பயன்: 2.1**

- தேவாலயத்தை பார்வையிடுவர்.
- சரியான நிலையில் சர்வ வல்லமை பொருந்திய இறைத்தந்தைக்கு வணக்கம் செலுத்தி சிறிய தியானமொன்றைக் கூறுவார்.
- தேவாலையத்தினுள் அமைதியைப் பேணி தேவனுக்கு கௌரவம் செலுத்துவார்.
- வணக்க முறைகளை சரியாக வெளிப்படுத்தி வணக்க கீதமொன் றைப் பாடுவர்.

**கற்றல் வளங்கள் :** • அயலில் உள்ள தேவாலயம், கிறிஸ்தவ பாடல் புத்தகம்.

**கற்றல்–கற்பித்தல் முறைகள்:**

**படி 1:**

- மாணவர்களை தேவாலயத்துக்கு அழைத்துச் சென்று தேவாலயத்தைப் பார்வையிடச் செய்யுங்கள்.
- தேவாலயத்தைப்பற்றி சிறிய அறிமுகமொன்றைச்செய்யுங்கள்.
- இங்கு எழுந்தருளியிருக்கும் திவ்ய நற்கருணை நாதரை வணங்கி நமஸ்கரிக்க வேண்டும் எனக் கூறி கீழ்க்காணும் பாடலை மாணவர் களுடன் சேர்ந்து பாடுங்கள்.

  **கிறித்தவ கீதம்–344**

  நமஸ்கரிப்போம் தலை தாழ்த்தி - 3<br>
  புகழ்ந்திடுவோம் கவி பாடி - 3<br>
  துதித்திடுவோம் ஆர்ப்பரித்தே
- முழங்காலில் நமச்காரம் செய்யவேண்டிய முறையை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள் (வலது காலை தரையில் மடித்து நமஸ்காரம் செய்து காட்டி மாணவர்களும் அவ்வாறு நமஸ்கரிப்பதற்கு வழி நடத்துங்கள்).
- தேவாலயத்தினுள் அமைதியைப் பேனுவதற்கு மாணவரை வழி நடத்துங்கள்.
- தலையைத் தாழத்ததுதல் முன்னோக்கி கைகளைக் கூப்பி வணங்குதல் ஆகியவற்றை முன்மாதிரியாகச் செய்து காட்டுங்கள்.
- சரியான நிலைகளில் இறைததந்தையை வணங்கி மாணவர்களுடன் சேர்ந்து சிறிய செபமொன்றைச் செய்யுங்கள்.

**கணிப்பீடு:** • சரியான முறையில் இறைதந்தையை வணங்கி சிறிய செபமொன்றைக் கூறுவர்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக:**

- ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் திருப்பலிப் பூசையில் பங்குகொள்ளுதல்.

**2.0: கருப்பொருள்** வல்லமை பொருந்திய இறை தந்தையுடன் உரையாடுதல்.

**2.0 தேர்ச்சி :** வல்லமை பொருந்திய இறை தந்தையுடன் உரையாடுவார்.

**கற்றற் பயன்: 2.2**

- ஒவ்வொரு முறையும் செபிப்பதற்கு முன்பு (பிரார்த்தனைக்கும் முன்பு) அர்ச்சிஷ்ட சிலுவையை சரியாக உச்சரித்துக் குறிப்பிடு வார்.

**கற்றல் வளங்கள் :**

- மேன்மையான இயேசு எழுந்தருளியிருக்கும் திருச் சிலுவை.
- சிலுவையொன்றைச் செய்வதற்கு பொருத்தமான பொருட்கள்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி : 1**

- யேசு சிலுவையில் அறையப்பட்டிருக்கும் அர்ச்சிஷ்ட சிலுவையை மாணவர்களுக்குக் காட்டுங்கள்.
- அனைத்து மாணவர்களுக்கும் தெரியக்கூடிய வகையில் ஆசிரியர் சிலுவை அடையாளத்தை இடும் முறையைச் செய்து காட்டவும்.
- அனைத்து மாணவர்களும் (ஒவ்வொருவராக) சிலுவை அடையாளத்தை இடும் முறையைச் செய்து காட்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வார்த்தைகளை உச்சரித்து பல தடவை சிலுவை அடையாளத்தை இடுவதற்கு ஆசிரியர் மாணவர்களுக்கு வழி காட்டவும்.

**படி : 2**

- அர்ச்சிஷ்ட சிலுவையை இடும் சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவர்கள் கொண்டு வந்த பொருட்களைப் பயன்படுத்தி சிலுவையொன்றை அமைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு:**

- அர்ச்சிஷ்ட சிலுவையை இடும் முறையை சரியாகக் காட்டுவார்.
- சிலுவையொன்றை உருவாக்குவார்.

**நடைமுறை வாழ்க்கைப் பயன்பாட்டுக்காக:**

- அதிகாலையில் நித்திரை விட்டு எழும்போதும் இரவு நித்திரைக்குச் செல்லும் முன்பும் அர்ச்சிஷ்ட சிலுவை அடையாளத்தை இடுதல்.

**கருப்பொருள்:** வல்லமை பொருந்திய இறை தந்தையுயின் பிள்ளையாகுதல்.

**3.0 தேர்ச்சி :** வல்லமை பொருந்திய இறை தந்தையின் பிள்ளையாக மாறுதல

.

**கற்றற் பயன்: 3.1**

- திருமுழுக்கின் மூலம் இறைவனின் பிள்ளையாக மாறும் விதத்தை தெளிவாக விளக்குவார்.
- இறைவனின் பிள்ளை திருச்சபையின் அங்கத்தவராகின்றோம் என்பதை எடுத்துக் கூறுவார்
- திருமுழுக்கு சந்தர்ப்பத்தை குழுவாக நடித்துக் காட்டுவார்.
- தமது ஞானப்பெற்றோர் பற்றிய தகவல்களைக் கூறுவார்.
- தற்போதைய திருத்தந்தைக்கு கீழ்ப்படிந்து திருச்சபையின் அங்கத்து வத்தின் பொறுப்பை நிறைவேற்றிய சந்தர்ப்பங்களை கூறுவார்.

**கற்றல் வளங்கள் :**

- திருமுழுக்குப் பெற்ற சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், பொம்மையொன்று, நீர்ப்பாத்திரமொன்று
- நடிப்பதற்குத் தேவையான உடைகள்.
- பரலோக இராச்சியத்தைக் காட்டும் படமொன்று.
- நரகத்தைக் காட்டும் படமொன்று.

**கற்றல் கற்பித்தல் செயன்முறைகள்**

**படி 1:**

- கிறிஸ்தவராக மாற்றும் சந்தர்ப்பம் பற்றி மாணவரிடம் கேட்டறி யுங்கள்.
- அது திருமுழுக்கு எனப்படும் என்பதை நினைவுபடுத்துங்கள்.
- குருவானவர், தாய்,தந்தை,ஞானபெற்றோர் ஆகியோராக பொருத்த மான மாணவர்களையும்ஏனைய மாணவர்களை உறவினர்கள், நண்பர் களாகவும் பாவித்து பெரிய பொம்மை ஒன்றுக்கு திருமுழுக்கு உற்சவத்தை நடித்துக்காட்ட இடமளியுங்கள்.

**படி 2:**

- ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய மாணவர்கள் திருமுழுக்குப் பெற்ற சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட புகைபடங்களை கொண்டு வரச்செய்து அவற்றை மற்றவர்களுடன் பரிமாற்றிக் கொண்டு கலந்துரையாடலுக்கு இடமளியுங்கள்.

**படி 3:**

- திருமுழுக்கு பெறுவதன்மூலம் தாம் இறைவனின் பிள்ளையாகிறார் என்றும், இயேசுகிறிஸ்துவின் நண்பனாகிறார் என்றும், பரிசுத்த திருச்சபைக்கு சொந்தமாகிறார் என்றும், திருவருட்சாதனங்களைப் பெறும் உரிமையைப் பெறுகின்றோம் என்பதனை கலந்துரையாடுங் கள். அதேபோல் அங்கிருக்கும் தலைமைத்துவத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் கலந்துரையாடுங்கள்.

- மாணவர்களுடன் சேர்ந்து பின்வரும் பாடலை பாடுங்கள்.

  நாங்கள் இயேசுவின் தோழர்
  நாங்கள் இயேசுவை நேசிக்கிறோம்
  இயேசுவும் எம்மை நேசிக்கிறார்

படி 4 :

- தற்போதைய திருத்தந்தையின் புகைப்படமொன்றைச் காட்டி அவரை முன்மாதிரியாகக் கொண்டு தனது திருமுழுக்கின் பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமென்பதைத் தெளிவுப்படுத்துங்கள்.

படி 5 :

- திருமுழுக்கின் மூலம் இறை பிள்ளைகளாகிய நாம் அனேகமான கொடைகளை பெற்றுக்கொள்கிறோம் என்பதையும், திருச்சபையின் அங்கத்தவரகின்றோம் என்பதையும் மாணவர்களிடம் அளவற்ற மகிழ்ச்சி ஏற்படும் வகையில் எடுத்துக்கூறுங்கள்.
- பாடநூலில் பரலோக இராச்சியத்தைக் காட்டும் படங்களை மாணவர் களுக்குக் காட்டுங்கள்.
- இவ்வுலகில் நற்காரியங்களை செய்வதன் மூலம் பரலோக இராஜியத்துக்குள் பிரவேசிக்கக்கூடிய முறையைக் கலந்துரை யாடுங்கள்.
- பாடபுத்தகத்திலுள்ள நரகத்தின் காட்சிகளைக் காட்டும் படமொன்றை மாணவருக்கு காட்டி பின்வரும் காரணங்களை முன்வையுங்கள்
  - ★ நாளாந்த வாழ்க்கையில் நாம் தீய செயல்களில் ஈடுபடுதல் பாவமாகும் என்பதை எடுத்துக்கூறுங்கள்.
  - ★ பாவம் செய்பவர்கள் மோட்சத்துக்குச் செல்ல மாட்டார்கள்.
  - ★ அவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள்.
  - ★ நரகத்தில் துன்பம் அனுபவிக்க நேரிடும், அழுகையும், புலம் பலும் இருக்கும்.
- மாணவர்கள் செய்யும் நல்ல செயல்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்ப மொன்று வழங்குங்கள்.

- பின்வரும் பாடலை ஒன்று சேர்ந்து பாடுங்கள்.

இயேசு சுவாமியை வரவேற்போம்
பாவ மன்னிப்பு பெற்றிடுவோம்
அறவழியில் வாழ்ந்திடுவோம்
நல்லுலகை சுதந்தரிப்போம்
நல்லதையே நிதம் நினைப்போம்
நல் வார்த்தை உரைத்திடுவோம்
நற்சேவைகள் செய்திடுவோம்
நல்லுலகை சுதந்தரிப்போம்
துன்புறுத்தல் விலக்கிடுவோம்
பழிவாங்கல் மறந்திடுவோம்
கோபத்தை விரட்டிடுவோம்
நரக வாசலை மூடிடுவோம்
பொய் பேசுதலை தவிரத்திடுவோம்
வஞ்சனைக்கு ஒதுங்கிடுவோம்
தீயவற்றை விலக்கிடுவோம்
நரக வாசல் மூடிடுவோம்

**கணிப்பீடு:**

- திருமுழுக்குச் சந்தர்ப்பத்தை ஒன்றுசேர்ந்து நடித்துக் காட்டுவதற்கு பங்கு கொள்வர்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- முன் மாதிரியான இறை பிள்ளைளயாக செயலாற்றுதல்.

**4 கருப்பொருள்** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகள்

**4.0 தேர்ச்சி :** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகளைப் பெயரிடுவார்.

**கற்றற் பயன்: 4.1**

- இறை அன்னை என்பவள் மேன்மையான இயேசுவின் தாயானவள் என்பதைக் கூறி அருன் நிறைந்த மரியா வாழ்க ஜெபத்தையே பக்தியுடன் கூறுவார்.
- இறையன்னை கொண்டிருந்த உயர்ந்த குணவியல்புகளை பெயரிடுவர்.

**கற்றல் வளங்கள்:**

- இறையன்னையின் திருச்சொரூபம், பூக்கள்
- கிறிஸ்தவ கீதப்புத்தகம்
- ஜெபமாலையொன்று
- சிலுவையொன்று
- வாழ்த்து அட்டை யொன்றை உருவாக்குவதற்கு அவசியமான பொருட்கள்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி 1 :**

- மரியாளின் திருச்சொரூபத்தை வைத்து அலங்கரித்து மலரொன்றை வைப்பதற்கு அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்ப மொன்றை வழங்குங்கள்.
- மரியாளுக்கு பாடும் பாடலொன்றை மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.

**படி 2 :**

- மரியாள் மேன்மையான யேசுவின் தாய் என்பதை அறிமுகப் படுத்துங்கள்.
- உயர்ந்த குணம், கீழ்ப்படிதல், உதவி செய்தலாகிய இறை அன்னையின் சிறந்த குண நலன்களை வெளிப்படுத்திக் காட்டுங்கள்.
- இறை அன்னையை அறிமுகப்படுத்துவதற்காக பயன்படுத்தும் ஏனைய பெயர்களை முன்வையுங்கள் (உதா : லூர்து மாதா, ஜெபமாலை மாதா, கார்மேல் மாதா, மடு மாதா)
- இறையன்னையின் ஆசி கிடைக்கட்டும் என வேண்டுதல் செய்து தனது தாய்க்கு அல்லது தான் மிகவும் நேசிக்கும் சகோதரிக்கு வாழ்த்து அட்டையொன்றை அமைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**படி 3 :**

- அருள் நிறைந்த மரியாயே வாழ்க. என்ற செபமன்னை தொடர்பு படும் ஜெபம்
- ஜெபமாலையைக் காட்டி இறையன்னை தொடர்பாக மாணவர் களுக்கு தெரிந்த விடயங்களைக் கேட்டுச் சுருக்கமான கலந்துரை யாடலொன்றை நடத்துங்கள்.
- தேவையான பொருட்களை வழங்கி ஜெபமாலையென்றை உருவாக் குவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- இறை அன்னையிடமிருந்த சிறந்த குண நலன்களைக் கூறுவார்.
- ஜெபமாலையென்றை உருவாக்குவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- தினமும் வீட்டில் இறை அன்னைக்கு மலரொன்றை வைத்து ஜெபத்தை ஜெபித்தல்.

**4.0 கருபபொருள் :** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகள்

4.0 தேர்ச்சி : மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகளைப் பெயரிடுவார்.

**கற்றற் பயன்: 4.2**
- வளர்ப்புத் தந்தையான புனித சூசை அவர்கள் உத்தம யேசுவை அன்புடன் பராமரித்தார், என்பதைக் கூறுவார்.
- தூய சூசை அவர்களின் உயர்ந்த குணங்களை விபரிப்பார்.
- வாழ்த்து மடலொன்றை நிர்மாணிப்பார்.

**கற்றல் வளங்கள் :**
- கிறிஸ்தவ கீதப் புத்தகம், புனித சூசையப்பரின் படமொன்று, வாழ்த்து அட்டையொன்றுக்குத் தேவையான பொருட்கள்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி 1:**
- புனித சூசையப்பருக்காகப் பாடும் பின்வரும் பாடலைப் பாடுங்கள். (“இறைவனைப் புகழ்வோம்” பாடல் எண் 450) எங்கள் காவலாம் சூசை தந்தையின் மங்களங்கள் என்றும் சொல்லி இங்கு பாடுவோம் செங்கை அதிலே தங்க புஷ்பம் தங்கும் கோலை ஏந்திடும் கன்னித் தாயாரின் பத்தா நீ அல்லோ உன்னதமாய் பேறும் மாட்சி உற்ற பாக்கியனே சென்னி மகுட முடிபுனைந்த மன்னர் கோத்ர மாதவா

**படி 2:**
- புனித சூசையப்பரின் ஆசி கிடைக்கட்டும் என வேண்டி புனித சூசையப்பரின் படத்துடன் கூடிய வாழ்த்து அட்டையொன்றைத் தனது தந்தைக்கு அல்லது குருவானவருக்காக நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.

**படி 3:**
- வல்லமை நிறைந்த இறை தந்தை மேன்மையான இயேசுவின் தந்தையாக இருப்பினும் இவ்வுலகில் மேன்மையான இயேசுவை பராமரித்த தந்தை புனித சூசையப்பர் என்பதையும் அதனால் அவர் மேன்மையான இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக அறிமுகப்படுத்தப்படுவதையும் கலந்துரையாடுங்கள்.
- புனித சூசையப்பரின் தொழிலையும் குணத்தையும் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்

**கணிப்பீடு :**
- தனது தந்தைக்கு அல்லது பங்குத் தந்தைக்கு புனித சூசையப் பரின் ஆசி கிடைப்பதாக என வேண்டி வாழ்த்து அட்டையொன்று தயாரிப்பர்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**
- தனது வளர்ப்புத் தந்தையாகிய புனித சூசையப்பருக்கு மேன்மை யான இயேசு உதவியதைப் போன்று தனது பெற்றோருக்கு உதவுதல்.

**4.0 கருபபொருள்:** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகள்

**4.0 தேர்ச்சி :** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகளைப் பெயரிடுவார்.

**கற்றற் பயன்: 4.3**

- நத்தாரின் அர்த்தத்தைப் பகிர்ந்து கொள்ளுதலை வகுப்பறை யினுள் செயற்பாடுகளால் வெளிப்படுத்துவார்.
- மேன்மையான இயேசுவின் பிறப்பை நடித்துக் காட்டுவார்.
- நத்தார் வாழ்த்து மடலொன்றை நிர்மாணிப்பார்.

**கற்றல் வளங்கள் :**

- கிறிஸ்தவ கீதப் புத்தகம்,நத்தார் வாழ்த்து மடலொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள், பொருத்தமான கடிதவுறையொன்று.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி 1:**

- பின்வரும் பாடலைப் பாடியவாறு கிறிஸ்துவின் பிறப்பை நடித்துக் காட்டுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- (-இறைவனைப் புகழ்வோம்-பாடல் என் 431)
  தூய நகராம் பெத்லேமில் தேவ பாலகனும்
  நேயமுடனே அவதரித்தார் நெஞ்சம் மகிழ்ந்திடவே
  மாமலையோரம் மாட்டுக் குடிலில்
  மாதவன் மனுவானார்
  மாமரி மடியில் மன்னர்தி மன்னர்
  மாண்புடன் கண்ணயர்ந்தார
  மார்கழி மாதம் மயங்கும் குளிரில்
  மரியின் மனம் நெகிழ
  பார்புகழ் வேந்தன் பனியில் நடுங்கி
  பாசத்தில் தேங்கி நின்றார்.
- பாடலைப் பற்றி கலந்துறையடி நத்தாரின் அர்த்தத்தை மாணவர் களுக்கு தெளிவு படுத்துங்கள்.(மேன்மையான இயேசு பிறந்த இடம், வால் நட்சத்திரம், மாட்டுத்தொழுவம், மேய்ப்பர்கள், மூவரசர்கள் ஆகியவை)
- மேன்மையான இயேசுவின் பண்புகளைக் கூறும் நத்தாரின் மகிழ்ச்சியை ஏழ்மையானவர்ளுடன் பகிர்ந்துக்கொள்ள வேண்டும் என்பதை கலந்துரையாடுங்கள்.

**படி 2:**

- மாட்டுத்தொழுவம், நத்தார்கால சுற்றாடல், மேன்மையான இயேசுவின் நடத்தையில் விசேட நிகழ்வுகள் ஆகியவற்றில் ஏதாவதொன்றை உள்ளடக்கிய வாழ்த்து அட்டையொன்றைச் செய்து தான் நேசிக்கும் பெரியவரொருவருக்கு கொடுப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

படி 3:

- மறைந்திருக்கும் நத்தார் தாத்தா (Sacred Santa) செயற்பாட்டுக்கு மாணவரை முகப்படுத்துங்கள்.
    - ★ மாணவர்கள் விரும்பிய சிறிய பரிசுப் பொருளொன்றைக் கொண்டு வரும்படி முதல் நாளில் கூறுங்கள் (வாழ்த்து அட்டையொன்று, பூவொன்று, பென்சிலொன்று போன்ற பொருட்கள்).
    - ★ வகுப்பு மாணவர்களின் பெயர்கள் அடங்கிய துண்டுகளைச் செய்து பாத்திரமொன்றிலிடுங்கள்.
    - ★ அவற்றில் ஒன்றுவீதம் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
    - ★ அதை ரகசியமாக திறந்து பார்ப்பதற்கு அறிவுறுத்துங்கள். தாங்கள் பெற்றுக்கொண்ட துண்டிலுள்ள நண்பனுக்கு தான் நத்தார் தாத்தாவாகி அந்த பரிசுப்பொருளை வழங்குவதற்கு முகப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- மேன்மையான இயேசுவின் பிறப்பை நினைவுகூர்ந்து நத்தார் வாழ்த்து மடலொன்றைத் தயாரிப்பர்.
- மறைந்திருக்கும் நத்தார் தாத்தாவாகி நட்பை வெளிப்படுத்துவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- ஒற்றுமையாக, சமாதானமாக, மகிழ்ச்சியாக நத்தாரைக் கொண்டாடுவார்.

**4.0 கருப்பொருள் :** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகள்

**4.0 தேர்ச்சி :** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகளைப் பெயரிடுவார்.

**கற்றற் பயன்: 4.4**

- மேன்மையான இயேசுசெய்த முதல் அருள் அடையாளத்தினூடாக அவரினுள் காணப்பட்ட உயர்ந்த குணாதிசயங்களைக் கூறுவார்.
- மற்றையோரின் தேவைகளைக் காணும் போது அவர் உதவி செய்த சந்தர்ப்பங்களைப் பெயரிடுவார்.
- முதலாவது அருள் அடையாளத்தை நடித்துக் காட்டுவார்.

**கற்றல் வளங்கள் :**
- திரு விவிலியம்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி 1:**

- மேன்மையான இயேசு செய்த முதலாவது அருள் அடையாளமாகிய கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரைத் திராட்சை இரசமாக்கிய அருளடையாளம் அடங்கியுள்ள திருவிவிலியப் பகுதியை மாணவர் களின் முன்பாக வாசியுங்கள்.
- மேன்மையான இயேசு தொடர்பாகப் பக்தியேற்படும் வகையில் அந்த சம்பவத்தை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்
- செவிமடுத்த கதையை நடித்துக்காட்டுவதற்கு மாணவர்களை முகப் படுத்துங்கள்.

**படி 2:**
- புனித **யோவான்** 2:1-2 இனூடாக இறை அன்னையின் பங்கு பற்றுதலை மாணவர்களுக்கு தெளிவுப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**
- கதையில் விருப்பமான சந்தர்ப்பத்தைச் சித்திரமாக கட்டியெழுப்புவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- தேவையொன்றைக் கண்ட போது பிறருக்கு உதவிசெய்தல்

**4.0 கருப்பொருள்:** மேன்மையான யேசுவின் விசேட நற்பண்புகள்

**4.0 தேர்ச்சி:** மேன்மையான யேசுவின் விசேட நற்பணபுகளைப் பெயரிடுவார்.

**கற்றற் பயன்: 4.5**

- மேன்மையான இயேசு எம்மில் வைத்துள்ள அன்பின் காரணமாக துன்பங்களை அனுபவித்து,மரணித்து, உயிர்த்தெழுந்தார் என் பதைக் கூறுவார்.
- மேன்மையான இயேசுவானவரில் வைத்துள்ள அன்பை வெளிப் படுத்துவதற்காக சிறிய விளையாட்டுக்கள் அடங்கிய ஆன்மீக மலர்ச்செண்டு ஒன்றைத் தயாரிப்பர்.

**கற்றல் வளங்கள்:**

- கிறிஸ்தவ பாடல் புத்தகம், சிலுவைப்பாதை நிலைகள் குறிக் கப்பட்ட படமொன்று, ஆன்மீக மலர்ச்செண்டைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் .

**கற்றல்– கற்பித்தல் உத்திகள்:**

**படி 1:**

- மாணவர்களுடன் சேர்ந்து பின்வரும் பாடலைப் பாடுங்கள் (“இறைவனைப் புகழ்வோம்” பாடல் எண் 80)

“பாடுகளின் பாதையிலே
தேவமகன் ஊர்வலமோ
பாவங்களின் பாரமெல்லாம்
திருச்சிலுவை வடிவல்லவோ
மக்களுக்காய் இரங்கி நின்றார்
மக்கள் மனம் இரங்கவில்லை
பக்கமெல்லாம் பறந்ததம்மா
பார்த்த கண்கள் சிவந்ததம்மா”…..

**படி 2:**

- மேன்மையான இசே துன்பம் அனுபவித்து மரணித்த நிகழ்வை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- தேவாலயத்துக்கு மாணவர்களை அழைத்துச்சென்று (அல்லது சிலுவைப் பாதையின் நிலைகள் அடங்கிய படத்தைக் காட்டி) மேன்மையான இயேசுவின் துன்பப் பாடுகளை விளக்குதல்.

- மேன்மையான இயேசுவில் உள்ள அன்பின் காரணமாக தம்மால் செய்யக்கூடிய பக்தி முயற்சிகளைச் செய்வதற்கு மாணவர்களை முகப்படுத்துங்கள் (உ+ம் ஒறுத்தல் முயற்சிகள், சிலுவைப் பாதை)

**படி 3**

- மரணத்தை தோற்கடித்து இயேசுவானவர் எமக்காக உயிர்த் தெழுந்து வெற்றி கொண்டார் என்பதை உறுதிப்படுத்தி அவருக்கு அன்பு செலுத்துவதற்காகச் சிறிய ஒறுத்தல் முயற்சியாக ஆன்மீக மலர்க்கொத்தொன்றை உருவாக்குவதற்கு

**கணிப்பீடு:**

- மேன்மையான இயேசுவின் மரணமும் உயிர்ப்பும் தொடர்புடைய தாக இருப்பதால் ஆன்மீக மலர்க்கொத்தொன்றை உருவாக்கு வார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்துக்காக**

- தேவாலயத்தில் சிலுவைப்பாதையில் பங்குகொள்ளல். மாண வருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**5.0 கருப்பொருள்:** திருவிவிலியமும் தூயவர்களின் நடத்தையும்.

**5.0 தேர்ச்சி :** திருவிவிலியத்தையும் தூயவர்களின் நடத்தையையும் அறிந்து கொள்வர்.

**கற்றற் பயன்: 5.1**

- தேவவார்த்தை அடங்கிய திருவிவிலியம் கத்தோலிக்கரின் மேன்மையான நூலாகும் என்பதைக் கூறுவார்.
- திருவிவிலியத்திற்கு மதிப்பளிக்கும் விதத்தை வகுப்பறையில் செயற்படுத்துவார்.

**கற்றல் வளங்கள் : 5.1 திருவிவிலியம்**

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி 1**

- திருவிவிலியத்தை வகுப்பில் வைப்பதற்குப் பொருத்தமான இடமொன்றை ஆயத்தப்படுத்தல்.
- வகுப்பறையில் ஆயத்தப்படுத்தப்பட்ட இடத்துக்கு மாணவர் களுடன் ஊர்வலமாக திருவிலியத்தை எடுத்துச் செலலுங்கள்.
- திருவிலியத்தை கௌரவத்துடன் அந்த இடத்தில் வையுங்கள்.

**படி 2**

- இறை வார்த்தை (சர்வ வல்லமை பொருந்திய பிதாவின் அன்பு வார்த்தை) அடங்கியுள்ள நூல் திருவிவிலியம் என்பதை அறிமுகப் படுத்துங்கள்.
- கத்தோலிக்கரின் மேன்மையான நூல் திருவிலியம் என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- இயேசுவின் பிறப்புக்கு முன்னரும் பின்னரும் நடைபெற்ற நிகழ்வுகள் இதில் எழுதப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டி பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் திருவிலியம் இரு பகுதிகளை கொண்டுள்ளது எனத் தெளிவுபடுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- திருவிலியத்திற்கு மதிப்பளித்தல்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- தேவ வார்த்தையை கடைப்பிடித்து திருவிலியத்திற்கு மதிப் பளிப்பார்.

**5.0 கருப்பொருள்:** திருவிவிலியமும் தூயவர்களின் நடத்தையும்.

**5.0 தேர்ச்சி:** திருவிவிலியத்தையும் தூயவர்களின் நடத்தையையும் அறிந்து கொள்வர்.

**கற்றற் பயன்: 5.2:**

- தூய யோசப்வாஸ் அடிகள் எமது நாட்டின் அப்போஸ்தலர் என்பதைக் கூறுவார்.
- இயேசுவை அவர் மிகவும் அன்பு செய்தமையால் எமதுநாட்டுக்கு வருகை தந்து உயிர்த்தியாகம் செய்து விசுவாசத்தைப் பாதுகாத்தார் என்பதைக் கூறுவார்.
- 2015ம் வருடம் அதிவணக்கத்துக்குரிய பாப்பரசர் எமது நாட்டுக்கு வருகை தந்து தூய யோசப்வாஸ் அடிகளை தூயர் பதவிக்கு உயர்த்தியமை பற்றிக் கலந்துரையாடுவார்.

**கற்றல் வளங்கள் :**

- தூய யோசப்வாஸின் அடிகளின்.
- கீர்த்தனை நூல்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி– 1**

- தூய யோசப்வாஸ் அடிகளின் படத்தை காட்டி (கீர்த்தனைப் பாடல் - 460) பாடலைப் பாடுங்கள்.
- சகல உபத்திரவங்களிலும் இருந்து விடுவிக்கும் தூயவர் தூய யோசப்வாஸ் அடிகள் என அறிமுகப்படுத்துங்கள்
- விசுவாசத்தைப் பாதுகாத்துத் தந்த தூயவர் என அறிமுகப்படுத்தி, அவருக்கு நாம் கௌரவம் செலுத்த வேண்டும் என்பதையும் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு:**

- உபத்திரவங்களை எதிர்கொண்டதன் மூலம் விசுவாசத்தைப் பாதுகாத்துத் தந்த தூயவர் யோசப்வாஸ் அடிகள் என்பதைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- தூய யோசப்வாஸ் அடிகளை மதித்தல்,(கௌரவித்தல்)
- தூய யோசப்வாஸ் அடிகளை முன்மாதிரியாகக் கொண்டு திருச்சிலுவையை நமஸ்கரிப்பர்

**5.0 கருப்பொருள்:** திருவிவிலியமும் தூயவர்களின் நடத்தையும்.

**5.0 தேர்ச்சி:** திருவிவிலியத்தையும் தூயவர்களின் நடத்தையையும் அறிந்து கொள்வர்.

**கற்றற் பயன்: 5.3:**
- தேவ அன்னையின் தாய் தூய அன்னம்மாள் என்பதைக் கூறுவார்

**கற்றல் வளங்கள் :**
- தூய அன்னம்மாளின் படமொன்று
- பாடல் புத்தகம்

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி –1:**
- தூய அன்னம்மாளின் படத்தை மாணவர்களுக்குக் காட்டி சந்தான மாதாவே தாயாரே உன் பாதம் தஞ்சம் வந்தோம் ஆதாரம் தந்திடுவீர்....... என்ற பாடலை ஆசிரியர் மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்.
- தூய அன்னம்மாள் தேவ அன்னையின் தாய் என்பதையும் தூய சுவக்கீன் தேவ அன்னையின் தந்தை என்பதையும் மாணவர் களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- இவர்கள் இருவரும் இயேசுவின் பாட்டியும் தாத்தாவும் ஆவார்கள் எனவும், சிலாபம் தேவாலயம் தூய அன்னம்மாளுக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளது என்பதையும் எடுத்துக் கூறுங்கள்.

**கணிப்பீடு:**
- தூய அன்னம்மாளுக்கான பாடலைப் பாடுவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- தூய அன்னம்மாளுக்கு மதிப்பளிப்பார்.

.

**5.0 கருப்பொருள்:** திருவிவிலியமும் தூயவர்களின் நடத்தையும்.

**5.0 தேர்ச்சி:** திருவிவிலியத்தையும் தூயவர்களின் நடத்தையையும் அறிந்து கொள்வர்.

**கற்றற் பயன்: 5.4:**

- தூய அந்தோனியார் சிறந்த போதனையாளர் என்பதைக் கூறுவார்.
- இயேசுவை அவர் மிகவும் அன்பு செய்தமையால் தூயவராக போற்றப்பட்டார் என்பதைக் கூறுவார்.
- சிறிய தூயவராக தமக்கும் அன்பு செய்யும் முறைமை பற்றி கலந்துரையாடுவர்

**கற்றல் வளங்கள் :**

- தூய அந்தோனியாரின் படமொன்று,
- கீர்த்தனை நூல்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி– 1**

- தூய அந்தோனியாரின் படத்தை மாணவர்களுக்குக் காட்டி - பாதுவா நகரில்- (இறைவனைப் புகழ்வோம்-பாடல் எண்- 336)என்ற பாடலை ஆசிரியர் மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.
- இயேசுவின் பெயரால் பல அரும் அடையாளங்கள் (புதுமை) செய்த தூயவர் என இவரை அறிமுகப்படுத்தி சிறந்த <u>போதனை யாளர்</u> என்பதையும் எடுத்துக் கூறுங்கள்.
- கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள தூய அந்தோனியார் ஆலயம் இவருக்கு அர்ப்பணிக்கப்பட்டள்ளது என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- தூய அந்தோனியார் இயேசுவுக்காக தனது வாழ்க்கையை அர்ப் பணித்த ஒருவர் என்பதையும் அவரை நாம் மதிக்க வேண்டும் என்பதையும் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு:**

- தூய அந்தோனியாரைப் பற்றி வாக்கியமொன்றைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக:**

- தூய அந்தோனியாரை மதித்தல் (கௌரவித்தல்)

**5.0 கருப்பொருள்:** திருவிவிலியமும் தூயவர்களின் நடத்தையும்.

**5.0 தேர்ச்சி:** திருவிவிலியத்தையும் தூயவர்களின் நடத்தையையும் அறிந்து கொள்வர்.

**கற்றற் பயன்: 5.5**

- தூய செபஸ்தியன் அடிகளார் தனது வாழ்க்கையை தூய திருச்சபைக்காக அர்ப்பணித்தார் என்பதைக் கூறுவார்.
- அவர் இயேசுவை மிகவும் அன்பு செய்தமையால் தூயவராக போற்றப்பட்டார் என்பதைக் கூறுவார்.

**கற்றல் வளங்கள் :**

- தூய செபஸ்தியாரின் படமொன்று
- இருன் புலாாடவி புத்தபம்

**கற்றல் கற்பித்தல் உத்திகள்:**

**படி–1:**

- தூய செபஸ்தியாரின் படமொன்றைக் காட்டி, செந்நீர்க்கறையின் செபஸ்தியாரே(-இறைவனைப் புகழ்வோம்- பாடல் எண் 334) என்ற பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுதல்.
- விசேடமாக தொற்று நோய்கள் குணமடைவதற்கு வரம் கேட்கும் தூயவரென இவரை அறிமுகப்படுத்துங்கள்.
- மொரட்டுவ, கந்தானை ஆகிய பிரதேசங்களில் தூய செபஸ் தியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயங்கள் இருப்பதாக மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- தூய செபஸ்தியார் இயேசுவுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவர் என்பதையும் அவரை நாம் மதிக்க வேண்டும் என்பதை யும் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு:**

- தொற்று நோய்கள் குணப்படுவதற்கு வரம் வேண்டும். தூயவர் என தூய செபஸ்தியாரை பெயர் குறிப்பர்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- தூயவர்களை மதித்தல்(கௌரவித்தல்)

**5.0 கருப்பொருள்:** திருவிவிலியமும் தூயவர்களின் நடத்தையும்.

**5.0 தேர்ச்சி:** திருவிவிலியத்தையும் தூயவர்களின் நடத்தையையும் அறிந்து கொள்வர்.

**கற்றற் பயன்: 5.6**

- அதி வணக்கத்துக்குரிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸிஸ்அவர்கள் தற்போதைய கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் என்பதை ஏற்றுக்கொள்வார்.

**கற்றல் வளங்கள் :**

- அதி வணக்கத்துக்குரிய பரிசுத்த பாப்பரசர் அவர்களின் புகைப்பட மொன்று **கற்றல்**

**கற்பித்தல் உத்திகள்:**

- அதி வணக்கத்துக்குரிய பரிசுத்த பாப்பரசர் அவர்களின் புகைப் படத்தைக் காட்டி அவர் எமது திருச்சபையின் தலைவர் என்பதை அறிமுகப்படுத்துங்கள். அவரின் எளிமையான வாழ்க்கை பற்றி குறிப்பிடுங்கள்.

**கணிப்பீடு:**

- கத்தோலிக்கத் திருச்சபையின் கண்களுக்குப் புலப்படக்கூடிய தலைவர் அவர் என்பதைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்க்கை உபயோகத்திற்காக :**

- அவருக்குக் கீழ்படிதலும் மதிப்பளித்தலும்.

# கணிப்பீடு

| | | | | | கத்தோலிக்கம் – கணிப்பீட்டுப் படிவம் |
|---|---|---|---|---|---|
| | | | | | தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளார். √<br>தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை • |
| | | | | | 01. அழகிய உலகைத் தந்த இறை தந்தையைத் துதிப்பதற்காக இறைதந்தை படைத்தவற்றை ஒட்டி பெரிய சுவரொட்டியொன்றை நிர்மாணிப்பர். |
| | | | | | 02. இறைதந்தையிடமிருந்து தாம் பெற்றுக்கொண்ட சரீரத்தின் நிமித்தம் நன்றி செலுத்துவதற்காக பாடல் பாடுவர். |
| | | | | | 03. இறைதந்தையின் அன்பின் காரணமாக எமக்குக் கிடைத்த பெற்றோருக்காக நன்றி செலுத்தி பாடல் பாடுவார். |
| | | | | | 04. கடதாசிப் பூவொன்றைச் செய்து ஆசிரியரை வரவேற்பார். |
| | | | | | 05. மரக்கன்றொன்றை நாட்டி பராமரிப்பதற்கு உதவுவார். |
| | | | | | 06. தனது உடலை தூய்மையாக வைத்திருப்பதற்கு செய்யக்கூடிய வற்றைப் பெயரிடுவார். |
| | | | | | 07. நல்ல பிள்ளை' தினத்தில் முன்மாதிரியான கிறிஸ்தவ பிள்ளையாக நடந்து கொள்வார். |
| | | | | | 08. பெற்றோருடன் இணைந்து நற்கருமங்களைச் செய்து இறைவனுக்குப் பிரதியன்பு காட்டக்கூடிய முறையைச் சித்திரமாக வரைவார். |
| | | | | | 09. இறைபிள்ளையாவதற்கு அவசியமான காரணிகளைப் பெயரிடுவார். |
| | | | | | 10. சரியான நிலைகளில் இறைவனை வழிபட்டு சிறிய செப மொன்றைக் கூறுவார். |
| | | | | | 11. அர்ச்சிஸ்ட சிலுவை அடையாளம் இடும் முறையை சரியாக செய்து காட்டுவார். |
| | | | | | 12. சிலுவையொன்றை அமைப்பார். |
| | | | | | 13. திருமுழுக்குச் சந்தர்ப்பத்தை நடித்துக் காட்டுவதற்கு ஒற்றுமையாகப் பங்குகொள்வார். |
| | | | | | 14. இறை அன்னையிடமிருந்த நற்பண்புகளைப் பெயரிடுவார். |
| | | | | | 15. செபமாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வார். |
| | | | | | 16. தனது தந்தைக்கு அல்லது பங்குத் தந்தைக்கு தூய சூசையப்பரின் அருள் வேண்டி வாழ்த்து அட்டையொன்றை உருவாக்குவார். |
| | | | | | 17. இயேசுவின் பிறப்பை நினைவுகூர்ந்து வாழ்த்து அட்டையொன்றை நிர்மாணிப்பார். |
| | | | | | 18. மறைந்திருக்கும் நத்தார் தாத்தாவாக நட்பை வெளிப்படுத்துவார். |
| | | | | | 19. மேன்மையான இயேசுவின் மரணமும் உயிர்ப்பும் தொடர்புபடுவதற் கான ஆன்மீக மலர்க்கொத்தொன்றை நிர்மாணிப்பார். |
| | | | | | 20. தூயவர்கள் இருவரின் பெயர்களைக் கூறுவார் |